


# அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்

## ஆத்தூர் ஊராட்சி

மனைப்பிரிவு வரைபடம்
மாவட்டம் : செங்கல்பட்டு
வட்டம் : மதுராந்தகம்
உள்ளாட்சி : ஆத்தூர்
கிராமம் : ஆத்தூர்
நில அளவை எண்கள் : 24/3A1, 3A2, 3B, 3C, 25/1A1A, 1A1B, 1A2, 1B, 2A, 2B1, 26/1 - ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
அளவு = 1 : 800(1"=66')
கோப்பு எண் : 73ZTJ4S3

**குறிப்பு:**

உத்தேச மனைப்பிரிவு இடத்தின் பரப்பு = 39150.00 ச.மீ (9.69 ஏக்கர்)
கோரிய மனைகள் = 240
ஒதுக்கிய மனைகள் = 239 (150 முதல் 158 வரை மற்றும் 192 முதல் 230 வரை EWS மனைகளாகும்)
மனுதாரர் உபயோகம் = 487.00 ச.மீ
மனைப்பிரிவு இடத்தின் எல்லை
நிலையில் உள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு (ம) TANGEDCO–க்கு ஆவண எண் 2361/2024, நாள்-15.05.2024-ல் தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.)

உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு - 10732.10 ச.மீ
EWS மனைகளின் பரப்பு - 2876.00 ச.மீ(10.12%)
பூங்கா- - 2946.00 ச.மீ(10.37%)
பொது உபயோகம் - 1 (LOCAL BODY) - 144.10 ச.மீ (0.51%) } 294.20 ச.மீ (1.04%)
பொது உபயோகம் - 2 (TANGEDCO) - 150.10 ச.மீ (0.53%)
கட்டிட வரம்பு : 9.0மீ அகல சாலை வரை - 1.5மீ (ம) 9.0மீ அகலம் முதல் 18.0மீ அகல சாலை வரை - 3.0மீ
மூலைமுடக்கு : 7.2மீ அகல முதல் 12.0மீ அகல சாலை வரை - 1.5மீ x 1.5மீ

## நிபந்தனைகள்:-

1. இம்மனைப்பிரிவுக்கு ஊராட்சி தலைவர், இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019-ன்படி பூங்கா, சாலை ஒதுக்கீடுகள் (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

3. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய (TANGEDCO) பயன்பாட்டிற்காக இடத்தின் அளவுகள், பரப்பளவு ஆகிய விவரங்களுடன் குறிப்பிட்டு தானமாக தானப்பத்திரம் மூலம் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

7. The Local body should issue final approval only after obtaining certificate of confirmation from the union engineer/BDO that the roads actually laid to the standards of the local body.

8. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

9. (a) அரசாணை (நிலை) எண்:181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD4(1), நாள்: 09.12.2020. (மற்றும்) அரசாணை (நிலை) எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்: 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020 – ல் கண்ட TNCDBR–2019 விதி எண்.47 (11) – ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் □Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants□ After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.
(b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் □Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the local body□.

10. குறைந்த வருவாய் பிரிவினருக்கான மனைகளை (EWS) 150 முதல் 158 வரை மற்றும் 192 முதல் 230 வரை EWS மனைகள்] மனைஉட்பிரிவு மனைஒருங்கினைப்பு செய்யக்கூடாது.

## சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

**ம.வ/ந.ஊ.உ.இ.(செ.மா)எண்:157/2024**

வ

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Chengalpattu
Date:2024.07.27 11:50:03

பொ.வள்ளியம்மாள்
மேற்பார்வையாளர்

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
செங்கல்பட்டு மாவட்டம்,
செங்கல்பட்டு-1.